திரு.கி. ராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, தூங்குவதற்கு வசதி உள்ள பஸ்களை விடமுடியாது என்று சொன்னார்கள். இப்போது, சென்னையிலிருந்து ராஜபாளையம் வழியாக 2, 3 திருவள்ளுவர் போக்குவரத்து பஸ்கள் சென்றாலும், ஒரு பஸ்ஸில் கூட கொஞ்சம் வசதியான புஷ் பேக் இருக்கைகள் கிடையாது. ராஜபாளையம் வழியாகச் செல்லுகிற பேருந்துகளில், ராஜ பாளையம் சட்டமன்ற உறுப்பினரான நானும், வாசுதேவநல்லூர் தொகுதி உறுப்பினர் திரு. ஈஸ்வரன் அவர்களும், தென்காசி தொகுதி உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர்களும், கடையநல்லூர் தொகுதி உறுப்பினர்........(மணி அடிக்கப் பெற்றது.)

(முற்பகல் 10-50)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: There is no Tra spc t commi-ttee for Assembly.

திரு. கி. ராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே புஷ் பேக் இருக்கை வசதியுள்ள ஒரு திருவள்ளுவர் போக்குவரத்து கழக பஸ் விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது உங்களுடைய தொகுதி என்ற காரணத்தால் அதற்கு நீங்களும் பரிந்துரை செய்கிறீர்கள் என்று கருதுகிறேன். அவர்கள் சூப்பர் டிலக்ஸ் பஸ் விடவேண்டும் என்று கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். ஏன் சூப்பர் டிலக்ஸ் பஸ் விடப்படாமல் இருக்கிறது என்பதைப் பற்றி தனியாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கலாம். நிறைய சட்டமன்ற உறுப்பினர்கள் வருகிறார்கள் என்று சொல்கிறார்கள். எனவே அதை நினைத்தாவது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திடம் சொல்லி அங்கே விட முடியுமா என்று ஆய்வு செய்து பின்னால் சொல்கிறேன்.

சேரன்மாதேவி மேலச்சேவல் பேரூராட்சி பகுதியில் இணைப்புச் சாலை அமைத்தல்.

243—(*வினா எண்.12149) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) சேரன்மாதேவி தொகுதி, மேலச்சேவல் பேரூராட்சி மன்றப் பகுதியில் பாலையன் கால்வாய் பாலத்திற்கும் தாம்பரபரணி ஆற்றின் குறுக்கே தற்போது கட்டப்பட்டு வரும் பாலத்திற்கும இடையே ஒரு இணைப்புச் சாலை போடும் சொர்க்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு approach road தான் போடவேண்டும். இந்த சாலை அமைக்கப்படவில்லை என்றால் கோபால்சாமி சமுத்திரத்திலிருந்து சித்தமல்லி, கருங்காடு பகுதி மக்கள் அங்கே போவதற்கு வாய்ப்பு இல்லை. 4, 5 கிலோ மீட்டர் சுற்றித்தான் வரவேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே இதை கருத்தில் கொண்டாவது இனி மேலாவது அந்தப் பாதையை அமைப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மாதேவித் தொகுதியின் மேல் நம்முடைய மாண்புமிகு திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு நிறைய ஆர்வம் இருக்கிறது என்று எனக்குத் தெரியும். இந்த அப்ரோச் ரோடு அமைக்க ஏறத்தாழ 10 ஏக்கர் நஞ்சை நிலத்தைக் கையகப்படுத்த வேண்டியிருக்கிறது என்று எனக்கு கணக்கு சொல்லியிருக்கிறார்கள். 15 லட்ச ரூபாய் இதற்குச் செலவாகும் என்றும் கணக்குச் சொல்லியிருக்கிறார்கள். எனவே இந்த நிதி நிலையின் காரணமாகத்தான் இப்போது முடியாது என்று நான் சொல்லியிருக்கிறேன். எதிர்காலத்தில் நிதி நிலைமைக்கு ஏற்ப அது பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போக்குவரத்துத் துறை மானியம் வாங்குவதற்கு முன்பு இதை வழங்கிவிடுங்கள்.

தஞ்சை பெரிய கோவிலில் ராஜ ராஜ சோழன் சிலை.

171—(*வினா எண். 49) திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை பெரிய கோவிலில் ராஜ ராஜ சோழன் சிலை அமைப்பதற்கு மைய அரசிடமிருந்து அனுமதி வந்துள்ளதா?

(ஆ) புதிய சிலை எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற்ற பிறகு இதுபற்றி முடிவு எடுக்கப்படும்.